[1987 மார்ச்]

தஞ்சை மருத்துவமனைக்கு ''Body Scanner''

8—(*வினா எண். 9442) டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு '' Body Scanner '' அளிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஒரு '' Body Scanner '' விலை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தற்சமயம் தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ''Body Scanner'' அளிக்கும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

(ஆ) ஒரு Body Scanner -ன் விலை சுமார் ரூ. 80 லட்சம் முதல் ரூ. 100 லட்சம் வரையிலும் ஆகும்.

டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்தில் எந்தெந்த மருத்துவமனைகளில் இப்படிப்பட்ட 'பாடி ஸ்கேனர்' அமைக்கப்பட்டு இருக்கிறது மேலும் மாவட்டத்தில் உள்ள தாலுக்கா மருத்துவமனைகளிலும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த அரசு ஆலோசனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, 'புல் பாடி ஸ்கேனர்' தமிழ்நாட்டில் மதுரையில் மட்டும்தான் இருக்கிறது. மற்ற மாவட்டங்களில் இதை வைக்கலாமா என்பதை நிதி ஆதாரத்தை வைத்துத்தான் பரிசீலித்துக்கொண்டு இருக்கிறோம்.

டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 'பாடி ஸ்கேனர்'-ஐத் தமிழக முதல்வர் அவர்கள் மதுரையில் துவக்கி வைத்தார்கள். அதற்குப் பிறகு 6 மாதங்கள் வரையில் தான் அது இயங்கியது. தற்போது அது மாதக்கணக்காக சரியாக இயங்கவில்லை. இப்படிப்பட்ட உயர்ரக நவீன கருவிகள்—தஞ்சையில் ஹீமோ டயலிசர்' என்ற நவீன கருவி இயங்காமல் இருக்கிறது. இவ்வளவுகோடி ரூபாய்களைச் செலவு செய்தும், அந்தச் கருவிகள்—இயங்காமல் இருப்பதைப் பார்த்து கேட்கும்போது, அதற்கு வேண்டிய நிபுணர்கள் ஜப்பானிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் வர வேண்டும் என்று சொல்கிறார்கள். அவர்களை எல்லாம் வரவழைத்து அந்தக் கருவிகளை மீண்டும் இயக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

1987 மார்ச் 2]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற கருத்து சரியான கருத்து அல்ல என்று நினைக்கிறேன். நான் மதுரைக்குச் சென்றபோது நானே விசாரித்தேன். பாடி ஸ்கேனர் நன்றாக இயங்குகிறது என்று சொன்னார்கள்.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மகளிர் ஆண்டாக இருக்கிற காரணத்தால் தஞ்சையில் இருக்கும் மருத்துவக் கல்லூரிக்கு குந்தவை நாச்சியார் அவர்கள் பெயரை வைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாடி ஸ்கேனரில் குந்தவை நாச்சியார் அவர்கள் வரமாட்டார்கள். (சிரிப்பு).

திரு. மு. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாடி ஸ்கேனரைப் போலவே சிறு நீரக வியாதியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு டயாலிசஸ் சிகிச்சை அளிக்கக்கூடிய கருவிகள் 3 சேலத்தில் வாங்கப்பட்டு 2 ஆண்டுகள் ஆகின்றன. இன்னும் அவை பொதுமக்களுக்கு உபயோகத்திற்கு வரவில்லை. சாதாரணமாக ஒரு ஏழை ஒரு முறை டயாலிசஸ் சிகிச்சை செய்யவேண்டும் என்றால் தனியார் மருத்துவமனைகளில் 3 நாட்களுக்கு ஒரு முறை 400 ரூபாய் கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே அங்குள்ள மருத்துவர்களே தனியார்களுக்கு வசதி செய்யும் பொருட்டு அரசு தலைமை மருத்துவ மனையில் 3 கருவிகளும் செயல்படாத நிலையில் பாதுகாத்து வருகிறார்கள் என்ற புகார் அரசுக்கு வந்திருக்கிறதா? அதைத் தடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற புகாரே போதும் என்று கருதுகிறேன். இதைப் பற்றி அரசு பரிசீலிக்கும். ஏற்கனவே இதைப்பற்றி நடவடிக்கை எடுத்து அதற்குண்டான கட்டிடங்கள் கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கின்றன.

டாக்டர் த. முகம்மது சலீம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாடி ஸ்கேனர் அரசு மருத்துவ மனைகளில் இருப்பதால் அங்கே இதற்குப் பணம் வசூல் செய்கிறார்கள். இதை எந்த அடிப்படையில் வசூல் செய்கிறார்கள். குறிப்பாக தனியார் மருத்துவமனைகளிலிருந்து அனுப்பும் நோயாளிகளுக்கு ஒரு தொகை வசூல் செய்கிறார்கள். அதற்கு பிரையாரிட்டி கொடுக்கிறார்கள். அப்படி ஏதேனும் சட்டத்தில் இடம் உள்ளதா அல்லது பணம் வசூலிக்கலாமா? என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குண்டான சாதாரண செலவைத்தான் வசூலிக்கிறார்கள் என்று கருதுகிறேன். வெளியே ஒரு பாடி ஸ்கேனர் மூலம் எடுக்கவேண்டும் என்று சொன்னால் 2500 ரூபாய் வசூல் செய்கிறார்கள். ஆனால் நாம் வசூல் செய்வது 500 ரூபாய் என்று நினைக்கிறேன்.

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிறபோது ஒவ்வொரு பாடி ஸ்கேனருக்கும் 90 லட்சம் ரூபாய், 100 லட்சம் ரூபாய் என்று விலை அதிகமாக இருக்கிற காரணத்தால் பல இடங்களில் வைக்க முடியவில்லை என்று சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் அங்கே மருத்துவமனை மட்டும் அல்லாமல் மிகப் பெரிய மருத்துவக் கல்லூரியும் இருப்பதால் மதுரைக்கு அடுத்தபடியாக தஞ்சையில் இந்த பாடி ஸ்கேனரை அமைப்பதற்கு அரசு விரைவாக நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே உள்ள அரசு மருத்துவ மனையிலேயே இன்னும் அந்த ஃபுல் பாடி ஸ்கேனர் அமைக்கப் படவில்லை. சென்னைக்கு வாங்கி வைத்ததற்குப் பிறகு தஞ்சையில் வைக்கலாம்.

இரத்த தானம் செய்பவர்களின் இரத்தத்தை பரிசோதனை செய்தல்.

9—*வினா எண். 9995) திரு கே. அன்பழகன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வழக்கமாக இரத்ததானம் செய்பவர்களின் இரத்தத்தில் எய்ட்ஸ் மற்றும் தொற்று நோய்கள் இருக்கிறதா என்று கடுமையாக பரிசோதிக்க அரசு உத்திரவிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் அடிப்படையில் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) மஞ்சள் காமாலை (Hepatitis) பற்றி பி. வைரஸ் (B, Vi us) சோதனைகளை செய்யுமாறும் குறைந்தபட்சம், 10 சதம் எச்டிஎல்வி 3 (H. T. L.V. -3) வைரஸ் பற்றி குறுக்கு சரி பார்ப்பு (cross check) செய்யுமாறும், மருத்துவக் கல்வி இயக்ககத்தின்கீழ் செயல்படும் எல்லா மருத்துவமனையிலுள்ள குருதி வங்கி மருத்துவ அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள்.